செ. கு. எண்: 261 நாள் : 01.10.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – **1.10.2013**

தேனி மாவட்டம், **பெரியார் அணையிலிருந்து** கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு தேனி மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **பெரியார் அணையிலிருந்து** கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக **4.10.2013 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம், தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள **5,146** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9